International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 02 Issue: 03 July to August 2020 www.irjtsjournal.org

# பட்டினப்பாலை வெளிப்படுத்தும் தமிழர்பண்பாடு

முனைவர்.பெ.விக்ரமன்,

*இடைநிலைஆசிரியர், ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி, சோலைத்தேவன்பட்டி, மயிலாடும்பாறை ஒன்றியம், தேனி மாவட்டம்-625579*

**முன்னுரை**

பண்டை இயற்கை வளங்கள் எல்லாம் - பத்துப்
பாட்டின் வளத்திற் கண்டறிந்து

மண்டல மெங்கும் புகழும் அருந்தமிழ் - வாசம்

நுகர்ந்து மகிழ்ந்து?

என பத்துப்பாட்டினை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாராட்டுகிறார். சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு ஓர் சுரங்கமாகும். சமுதாயத்தின் பிரதிபலிப்பை இலக்கியங்களில் காணலாம் என்பர். நாட்டுமக்களின் பண்பாடு, வணிகம் , பழக்க வழக்கங்கள் ,விழாக்கள் ஆகியவற்றினை அறியும் பொழுது அந்நாட்டின் சிறப்பினை அறிய முடிகிறது. இவற்றிற்கு உறுதுணையாய் நிற்பது இலக்கியங்கள். அவ்வகையில் பத்துப்பாட்டில் ஒன்றான பட்டினப்பாலையில் வெளிப்படும் தமிழர் பண்பாடு பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பட்டினப்பாலை**

பாலையும் வாகையும்

வாகை தானே பாலையது புறனே( தொல்-புறத்-15) 1

பத்துப்பாட்டு வரிசையில் ஒன்பதாவது நூலாக பட்டினப்பாலை அமைந்துள்ளது. இந்நூல் கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் இயற்றப்பட்டது. இந்நூல் 301 பாடல் வரிகளைக் கொண்டது. பாலைத்திணைக்குரிய பிரிதலும் பிரிதல் நிமித்தத்தையும் உரிப்பொருளாகக் கொண்டுப்பாடப்பட்ட நூலாகும். அகமும் புறமும் பற்றிய கருத்துகள் பட்டினப்பாலை பாடல் வரிகளில் காணப்படுகிறது. கண்ணகி , மாதவி பிறந்த காவிரிப்பூம்பட்டிணத்தின் சிறப்பினையும் , திருமாவளவனின் போர்த்திறனையும் , ஆட்சி மேன்மையையும் பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**காவிரிப்பூம்பட்டிணம்**

பழங்கால துறைமுகப்பட்டிணங்களில் முக்கியமான ஒன்று காவிரிப்பூம்பட்டிணம். தமிழக மக்கள் பிறநாட்டினருடன் கடல் வாணிகம் செய்தனர். “பழைய பௌத்த நூல்களில் காவிரிப்பட்டிணத்தை கவீரப்பட்டிணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பெரிப்ளூஸ் என்னும் நூல் இந்தத்துறைமுகத்தினை கமரா என்று கூறப்படுகிறது.கமரா என்பது காவிரிப்பூம்பட்டிணத்தின் சுருக்கமாகும். தாலமி கிரேக்க யவனர் இத்துறைமுகத்தைச் சபரிஸ் துறைமுகம் என்று குறிப்பிடுகின்றனர் .சபரிஸ் என்பது காவிரி என்பதன் திரிபு.”**2** பட்டினப்பாலை பாடல்வரிகளில் காவிரி ஆற்றின் சிறப்பினையும் காவிரியால் காவிரிபூம்பட்டிணமக்கள் பெற்ற சிறப்பான வாழ்க்கையினைப் பற்றி பட்டினப்பாலை பாடல் வெளிப்படுத்துகிறது.

வான்பொய்ப்பினும் , தான்பொய்யா

மலைத்தலைய கடல் காவிரி

புனல்பரந்த பொன்கொழிக்கும்
----------------------------------------------
இனமாவின் இணர்ப்பெண்ணை
முதற்சேம்பின் முளைஇஞ்சி (5-20)

**மக்கள் வளம்**

சங்ககால மக்களின் வாழ்வின் வளமையினை சங்கப்பாடல்கள் விளக்குகின்றன. அவ்வகையில் பட்டினப்பாலையில் காவிரிப்பூம்பட்டிணத்தில் வாழும் மக்களின் வளச்சிறப்பினையும் , காவிரிப்பூம்பட்டிணத்தின் அழகையும் பட்டினப்பாலை மிக அழகாக வெளிப்படுத்துகிறது.

நேரிழை மகளிர் உணங்குஉணர்க் கவரும்
கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை
பொற்கால் புதல்வர் புரவிஇன்று உருட்டும்
……………………………………………..
கொழும்பல்குடிச் செழும்பாக்கத்துக் ( 22-27)

காவிரிப்பூம்பட்டிணத்தில் வாழும் மக்கள் தங்களின் வீட்டின் முற்றத்தில் உலர்ந்து கொண்டிருந்த நெல் மணிகளை உண்ண வந்த கோழிகளை அவர்கள் அணிந்திருந்த பொன்னால் செய்யப்பட்ட காதணிகளைக் கொண்டு விரட்டினர் என்பதனை நோக்கும் பொழுது மக்கள் செல்வ செழிப்புடன் வாழ்ந்தனர் என்பதனை இப்பாடல் வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

**ஆடை**

நெசவுத் தொழில் பற்றி அறியாது இருந்த காலத்தில் தழைகளையே ஆடைகளாக அணிந்திருந்தனர் என்பதனை சங்க இலக்கிய நூல்கள் எடுத்துரைக்கின்றன. ஆம்பல் , நொச்சி ,குவளை ,செயலை ஆகிய தழைகளை ஆடைகளாக உடுத்தினர் என்பதை சங்க இலக்கியங்களில் காண முடிகிறது. சங்ககாலத்தில் தழை ஆடையும், விதவிதமான பட்டாடையும் அணிந்தனர் என்பதனை பட்டினப்பாலை பாடல்வரிகளில் காணலாகிறது. இன்றும் சில மலைப்பாங்கான இடங்களில் தழையாடைகளை பெண்கள் அணிகின்ற மரபுநிலை உள்ளது.

பைந்தழை மா மகளிரோடு (ப.பா -91 )
கானல் ஞாழற் கவின் பெருதழை (ஐங்-191)
சிறு வெள்ளாம்பல் இளையமாகத் தழையாயினவே ( புறம்-248)

**வேளாண் மாந்தர்**

காவிரிப்பூம்பட்டிணத்தில் வாழ்ந்த குடிமக்கள் அனைவரும் அறநெறி பின்பற்றி வாழ்ந்தனர் என்பதனை பட்டினபாலை பாடல் வரிகளின் மூலம் அறிய இயல்கிறது.

நீர்நாப் பண்ணும் நிலத்தின் மேலும்
ஏமாப்ப இனிது அஞ்சி
------------------------------------------------------
பண்ணியம் அட்டியும் பசும்பதம் கொடுத்தும்
புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை

கொடுமேழி நசை உழவர் (194-205)

வேளாண்தொழில் செய்யும் மக்கள் அருள்மனம் கொண்டவர்களாக இருந்ததோடு கொலைத்தொழில் செய்வதையும், களவு மேற்கொள்வதையும் அறவே வெறுத்தனர். மக்களிடையே வேறுபாடு காணது பழகி வந்ததோடு எருது, பசு மற்றும் பல விலங்குகளையும் பேணிக்காத்தனர். வேளாண்தொழில் செய்வது சிறந்தது என்று எண்ணி வாழ்ந்தனர். மக்கள் மட்டுமின்றி நீர்வாழ் உயிரினமும், நிலவாழ் உயிரினமும் பகையின்றி ஒன்றி விளையாடியதை பட்டினப்பாலை வரிகள் எடுத்துரைக்கிறது.

**விழாக்களும் பண்பாடும்**

சங்ககாலந்தொட்டு இன்றுவரையும் தமிழர் பண்பாட்டில் விழாக்கள் முக்கிய அங்கம் வகிக்கின்ற ஒன்றாகவே உள்ளது. காவேரிபூம்பட்டிணத்தில் வாழும் பரதவ மக்கள் கருவுற்ற சுறா மீனின் கொம்பை நட்டு தெய்வமென வழிபட்டு விழாக்கள் மேற்கொண்டனர். விழா நிகழ்வுகளை பகல், இரவு என பிரித்து கொண்டாடினர். கேளிக்கைக்கு நாடகம்,பாடல்,பட்டிமன்றம் ஆகிய நிகழ்வுகள் நடத்தினர். அகலமான கடைத்தெருக்களில் தோரணம் , கொடிகள் கட்டி அழுகுபடுத்தி மகிழ்ந்தனர்.

வெண்து தாளத்துத் தன்பூங்கோதையர்

சினைச் சுறாவின் கோடு நட்டு

மனைச் சேர்த்திய வல் அணங்கினால் (85-87)

கொடுந்திமில் பாதவர் குரு உச்சம் எண்ணும்

பாடல் ஒர்த்து நாடகம் நயந்தும்

வெண்ணிலாவின் பயன் நயந்தும்

கண் அடை இய கடைக்கங்குலான் (111-115)

**வணிகர்**

சங்ககாலத்தில் வணிகம் பண்டமாற்று முறையில் நடைபெற்றன என்பதனைக் காணலாகிறது.

வெள்ளை உப்பின் கொள்ளைசாற்றி

நெல்லொடுவந்த வல்வாய்ப் ப..்றி (29-30)

கடற்கரை நகரமான காவிரிப்பூம்பட்டிணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உப்புக்களை எடுத்துச் சென்று விற்று பதிலாக நெல் வாங்கி வந்த பண்டமாற்று வணிகமுறையைப் பற்றி அறிய முடிகிறது.

நெடுநுகத்துப் பகல்போல

நடுவுநின்ற நல்நெஞ்சினோர்,

வடுஅஞ்சி வாய்மொழிந்து

தமவும் பிறவும் ஒப்ப நாடிக்

கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூம்உம் குறைகொடாது

பல்பண்டம் பகர்ந்து வீசும் (206-211)

"இவர்களை அறநெறி பிழையாது வாணிகம் இயற்றும் வேத வாணிகர்" என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுவர்"3. வணிகர்களும் பொருள் சேர்ப்பது மட்டும் முக்கியம் எனக் கருதாது அறவழியில் செல்வது நன்று என்பதனை உணர்ந்து வணிகத்தொழில் மேற்கொண்டனர். வணிகர்கள் தமது குலத்துக்கு வரும் பழிபாவங்களுக்கு அஞ்சி தமது பொருளை மிகைப்படுத்தி கூறாமலும், பிறர் பொருளை குறைத்து மதிப்பிடாமலும் உண்மைநிலை கொண்டு பொருளுக்கான விலை கூறுவதும் விற்பதுமான செயல்களில் ஈடுபட்டு வந்தனர் என்பதை பட்டினப்பாலையில் காண முடிகிறது.

**விருந்தோம்பல்**

தமிழர்களின் தலைசிறந்த பண்பாடுகளில் விருந்தோம்பல் பண்பு நோக்கத்தக்கது. விருந்தினரை ஏழடி முன் சென்று வீட்டிற்கு அழைத்து வருவதும், செல்லும் பொழுதும் ஏழடி பின் தொடர்ந்து சென்று வழியனுப்பி வைப்பதும் வழக்கமாக கொண்டிருந்தனர். "இல்வாழ்க்கை நடத்தும் கணவனும் மனைவியும் தம் உற்றார் உறவினரைக் காக்கக் கடமைப்பட்டவர்,அவருடன் நில்லாது, தம் இல்லம் நாடி வரும் பிறரையும் உண்டியாலும் உறையுளாலும் உபசரித்தல் அவர்தம் கடமை என்று அறநூல்கள் அறைகின்றன."**4** என்பர் மா.இராசமாணிக்கனார். வருபவர்களுக்கு உணவு இல்லை என்று கூறாது எச்சமையமும் உணவு அளித்தனர். அவ்வாறு சோறு சமைத்து வடித்தகஞ்சி ஆறாக ஓடியதாக பட்டினப்பாலை பாடல் வெளிப்படுத்துகிறது.

அறம்நிலைஇய அகன்அட்டில்
சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்துஒழுகி
ஏறுபொரச் சேறாகித் (43-46)

**தலைவன் கூற்று**

முட்டாச் சிறப்பின் பட்டிணம் பெறினும்
வார்இருங் கூந்தல் வயங்குஇமை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே! (218-220)
திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே! (299-301)

தலைவன் பொருள் தேட தலைவியை பிரிந்து செல்ல நினைக்கிறான்.ஆனால் தலைவியின் அன்பின்பால் பிரிந்து செல்ல நெஞ்சம் மறுக்கிறது. எல்லாச் சீரும் சிறப்பும் உடைய காவிரிப்பூம்பட்டிணத்தை எனக்கு அளித்தாலும் என் தலைவியின் அன்புக்கு ஈடாக என்றும், பிரிவதனால் ஏற்படும் வேதனையானது திருமாவளவன் பகைவர் மீது வீசும் வேலினை விடக் கொடியதாகும் எனக் குறிப்பிடுகிறார். தலைவியின் தோளின் மேன்மையோ திருமாவளவனின் செங்கோலினும் குளிர்ச்சியானது என்ற தலைவனின் கூற்று மூலம் தலைவன் தலைவியின்பால் கொண்டுள்ள பற்றினை உணர முடிகிறது.

### திருமாவளவன் சிறப்பு

காவிரிப்பூம்பட்டினத்தின் மேன்மையினையும், மக்கள் வாழ்க்கைமுறையினையும் கூறுவதுடன் பாடலாசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் திருமாவளவன் என்ற கரிகால் வளவனின் சிறப்பையும் எடுத்தியம்புகிறார். சிறுவயதில் சிறைபட்டு மீண்டு படையெடுத்து வெற்றி பெற்று மருதநிலத்தை பாழாக்கியதுடன், சினம் தனியாத வளவன் ஒளி நாட்டார், அருவ நாட்டார், குடகு நாட்டார் இம்மூவரையும் அடிமைபடுத்தினான். சீரிய முறையில் செங்கோல் ஆட்சி புரிந்ததுடன், நினைத்ததை முடிக்கும் வலிமை கொண்டவனாக திருமாவளவன் விளங்கியதை பட்டினப்பாலை பாடல் வரிகள் வெளிப்படுத்துகிறது.

### முடிவுரை

பட்டினப்பாலை பாடல்வரிகளில் தலைவன் தலைவி மீது கொண்டுள்ள பற்றின் காரணமாக பொருளீட்டச் செல்ல நினைத்தும் செல்ல முடியாமல் இருப்பதும் , தலைவியின் மேன்மைக்கு ஈடாக காவிரிப்பூம்பட்டிணத்தை அளித்தாலும் செல்லோன் என்பதன் மூலம் தலைவன் துயர் அறிய முடிகிறது.காவிரி ஆற்றின் செழுமையால் காவிரிப்பூம்பட்டினம் செழுமையடைந்துள்ளதை காணலாகிறது. காவிரிப்பூம்பட்டிண மக்கள் வேளாண தொழில், வாணிகம் விருந்தோம்பல் ஆகியவற்றில் பண்பாட்டோடு திகழ்ந்தனர் என்பதனை பட்டினப்பாலை பாடல்வரிகள் இவ்வுலகிற்கு எடுத்துரைத்துள்ளதை நம்மால் அறிய முடிகிறது.

### அடிக்குறிப்புகள்

[1] தொல்காப்பியம் புறத்திணையில்

[2] மயிலை சீனி.வேங்கடசாமி பழங்காலத் தமிழர் வாணிகம் ப. 72-73

[3] பத்துப்பாட்டுமூலமும் நச்சினார்க்கினியார் உரையும் ப.553

[4] 4.மா.இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி ப.573